O.S. No.60/2022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 18.02.2026

DW1: ராமர் த/பெ– குருசாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1) நான் 1, 2 பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளை எங்கள் தரப்பில் விசாரிக்க உள்ளோம். தாவா சொத்து 1 ம் பிரதிவாதி வெள்ளைத்தாய் கணவர் பொன்மலை என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பொன்மலையை நான் சிறுவயதில் பார்த்துள்ளேன், எங்கள் ஊரைச்சேர்ந்தவர். பொன்மலைக்கு ஆறுமுகம் என்ற சகோதரர் உண்டு என்றால் சரிதான். தாவா சொத்தை நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் எடுத்து பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. எங்கள் ஊரில் உள்ள ஆண்டி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு யாரும் இல்லை. அழகர்சாமி மகன் ஆண்டித்தேவரை எனக்கு தெரியும். தாவா சொத்திற்கு கிழக்கே ஆண்டித்தேவர் சொத்து உள்ளது என்றால் சரியல்ல.

2) சர்வே எண்.1242 ல் உள்ள 2 ஏக்கர் 10 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 2 ஏக்கர் 10 செண்டில் எனக்கு தாவா உள்ளதா என்றால் அந்த சொத்தை சேர்த்து நான் கிரையம் பெற்றுள்ளேன். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் பற்றி தெரிந்து கொண்டேன். சர்வே எண்.1242 ல் மொத்தம் 6 ஏக்கர் 21 செண்ட் என்றால் சரிதான். அதன் கீழ்பக்கம் 3 ஏக்கர் 11 செண்ட் பொன்மலை என்பவர் ஆண்டித்தேவருக்கு கிரையம் கொடுத்த ஆவணம் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதன் விபரம் தெரியவில்லை. மேற்படி ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை.

3) எனது எதிர்வழக்குரையில் மேற்படி கிரைய ஆவணத்தை பற்றி

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் உள்ள விபரம் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். சர்வே எண்.1242 ல் மொத்தம் 6 ஏக்கர் 21 செண்டில் மேல்புறம் உள்ள 3 ஏக்கர் 10 செண்டில் வடபுறம் 2 ஏக்கர் 10 செண்ட் வாதிகள் கிரையம் பெற்றதாக கட்சி செய்து வருகின்றனர் என்றால் சரிதான். வாதிகள் கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 ல் கிழக்கு மாலாக ஆண்டித்தேவருக்கு விற்ற நிலம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் செல்லாது என பரிகாரம் கோரி எதிர்கோரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொன்மலை மற்றும் ஆறுமுகத்திற்கு இடையே ஏற்கனவே வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டு கீழ்புறம் உள்ள 3 ஏக்கர் 11 செண்ட் பொன்மலை பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு, அவர் அதை அவருடைய காலத்திலேயே 13.06.1988 ம் தேதி வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் ஆண்டித்தேவருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல.

4) பொன்மலை பாகத்தை கிரையம் செய்து கொடுத்த பின்னர் அவரது மனைவியான 1 ம் பிரதிவாதி, அவரது மகளான 2 ம் பிரதிவாதிக்குமேற்படி சொத்தை தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 தானசெட்டில்மெண்ட் ஆவணம் மலரணையாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 செல்லத்தகாத ஆவணத்தின் அடிப்படையில் 2 ம் பிரதிவாதியாகிய எனக்கு 07.09.2020 ம் தேதி எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 கிரைய ஆவணம் மலரணையாக எங்களால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

5) நான் கிரையம் பெற்றதாக சொல்லும் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில் பட்டா மாறுதல் உத்தரவு பெற்றேன் என்றால் சரிதான்.

செல்லத்தகாத ஆவணத்தின் அடிப்படையில் பெறப்பட்ட பட்டா மாறுதல் வாதிகளின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி பட்டா மாறுதல் உத்தரவிற்கு வாதிகளுக்கு எவ்வித அறிவிப்பும் கொடுக்கவில்லை என்பதால் பட்டா மாறுதல் உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் உத்தரவின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.7 கிஸ்தி ரசீதுகள் வாதிகளின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1ம் வாதியின் கணவர் மொத்த சொத்தில் மேல்புறம் உள்ள ஆறுமுகத்தின் பங்கான 3 ஏக்கர் 10 செண்டில் வடபுறம் 2 ஏக்கர் 10 செண்டை சரியான பிரதிபிரயோதனத்திற்கு கிரையம் பெற்று அவரது அனுபவித்து வந்து அவரது காலத்திற்கு பின்னர் வாதிகள் அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் மற்றும் நானும் சேர்ந்து ஏற்படுத்திய தானசெட்டில்மெண்ட் மற்றும் பிவா.சா.ஆ.4 கிரைய ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் எந்தவிதமான எதிர்கோரிக்கையும் தாக்கல் செய்யவில்லை என்பதாலும், தாவா வழக்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.